**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்திவெளியீடு**

**செ.வெ.எண். 392** **நாள் : 20.11.2025**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்கள், இராயபுரம் மண்டலத்தில் ரூ.9.71 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தனர்.**

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் இன்று (20.11.2025) இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.9.71 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிபணிகளைத் தொடங்கி வைத்தனர்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், பிரகாசம் சாலை, தாதா முத்தையப்பன் தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வார்டு-54, 55, 56, 57, 59 மற்றும் 60க்குட்பட்ட பல்வேறு தெருக்களில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் மின்மாற்றிகளைச் சுற்றிலும் பாதுகாப்புக் கட்டமைப்புகள் (View Cutter) அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-59க்குட்பட்ட ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சுவாமி சிவானந்தா சாலையில் உள்ள எம்.ஆர்.டி.எஸ். இரயில்வே மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதியை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.4.91 கோடி மதிப்பீட்டில் அழகுப்படுத்தும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

எம்.ஆர்.டி.எஸ். இரயில்வே மேம்பாலத்தின் கீழ், தனிப்பட்ட ஸ்கேட்டிங் பகுதி, ஊஞ்சல்கள், சாகச ஏறும் சுவர், மாற்றுத்திறனாளி குழந்தைகள் விளையாடும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்ளடக்கிய விளையாட்டு உபகரணங்கள், பல்வேறு வடிவங்களிலும், சிற்பத் தன்மையிலும் வடிவமைக்கப்பட்ட அமர்விடங்கள், பலநிலை அமர்வு அரங்கம், பொதுக்கழிப்பறை, குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், மேம்படுத்தப்பட்ட மின்விளக்கு மற்றும் கண்காணிப்புக் கேமராக்கள், நடைபாதைகள், மாற்றுத்திறனாளிகள் உள்பட அனைவரும் எளிதில் அணுகக்கூடிய வகையில் தடையற்ற வழித்தடங்கள் உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுகளின் போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு. பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.ராஜேஷ் ஜெயின், திரு. ல. நவீன், திரு. இசட் ஆசாத் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**